**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்,**

முன்னிலை: திரு.ஸ்வர்ணம் J.ராஜகோபாலன் B.A.B.L.,(Hons.)
கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண். 402/2025**

( **C.N.R.No.TNDG01–002319–2025)**

C.அம்புஜம் ... வாதி

//எதிர்//

மைனர்.D.ஜோதிலிங்கேஷ்வர்
மேற்படி மைனருக்கு தகப்பனாரும், கார்டியனுமான
T.துளசிதாஸ் அவர்கள் மூலம் ... பிரதிவாதி

இந்த உரிமையியல் வழக்கானது 17.03.2026–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.V.சந்திரசேகரன் அவர்களும், மைனர் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P.விஜயலெட்சுமி அவர்கள் முன்னிலையாகி, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனைவதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், உபய வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 23 விதி 3–ன்படி சமரசகுறிப்பு மனுவான இ.ம.எண். **01/2026** தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**தீர்ப்புரை**

பிராது சொத்தைப் பொறுத்து வாதியால் மைனர்.ஜோதிலிங்கேஸ்வரர் பெயரில் எழுதி வைக்கப்பட்டுள்ள 03.05.2023–ம் தேதி அய்யம்பாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவெண்1081/2023 என பதிவு செய்யப்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. வழக்குரையின் சுருக்கம்.**

வாதியானவர் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செவிலிய கண்காணிப்பாளராகவும், அவரது கணவர் வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் பதிவுக்கிளார்க்காகவும் பணியாற்றி, ஓய்வுபெற்றவர்கள். இருவரும் 11.03.1983 அன்று கடன் மற்றும் சம்பாத்தியத்தின் மூலம் வத்தலக்குண்டில் நிலம் வாங்கி, அதில் வீடு கட்டி, தங்களது பெயரில் பட்டா, மின்சாரம், தண்ணீர் குழாய் வசதி பெற்று வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு வேறு சொத்து எதுவும் இல்லை. வாதியும் அவரது கணவரும், மகன் துளசிதாஸ், மருமகள் நாகநந்தினி மற்றும் பேரன் ஜோதிலிங்கேஸ்வரன் ஆகியோருடன் ஒரே வீட்டில் வசித்து வந்தனர். முதிய வயதில் மகன் குடும்பம் உதவும் என்ற நம்பிக்கையில், 03.05.2023 அன்று பேரன் (மைனர்) ஜோதிலிங்கேஸ்வரன் பெயரில் தானசெட்டில்மென்ட் பத்திரம் பதிவு செய்தனர். பின்னர், மகன்–மருமகள் இடையே கடுமையான குடும்ப தகராறு ஏற்பட்டதால், நாகநந்தினி வீட்டை விட்டு பிரிந்து சென்று, தனது பொருட்கள் மற்றும் குழந்தையையும் எடுத்துச் சென்ற நிலையில், இவர்களுக்கிடையே உறவு முறிந்துள்ளது. இதனால், வாதி எதிர்காலத்தில் தன்னை பராமரிப்பார்கள் என்ற நம்பிக்கை முற்றிலும் நீங்கியுள்ளது. மேலும், பேரன் பெயரில் செய்யப்பட்ட தானசெட்டில்மென்ட் பத்திரம் எதிர்காலத்தில் வாதி மற்றும் அவரது கணவரை வீட்டிலிருந்து வெளியேற்றும் அபாயத்தை உருவாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, 03.05.2023 அன்று பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மென்ட் பத்திரத்தை சட்டப்படி ரத்து செய்ய வேண்டி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**03. எதிர்வழக்குரையின் சுருக்கம்.**

பிராதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மையானது. வாதியானவரும், அவருடைய கணவரும் அவர்களுடைய இறுதிகாலம் வரை மகனும், பேரனும், உடனிருந்து ஆதரவாகவும், பாதுகாப்பாகவும் பராமரிப்பார்கள் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்களுடைய மகன் துளசிதாஸை கார்டியனாகக் காட்டி அவருடைய மகன் மைனர் ஜோதி லிங்கேஷ்வரர் பெயரில் கடந்த 03.05.2023–ம் தேதி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் வாதியின் பெயரில் உள்ள வீட்டை வாதி பதிவு செய்து வைத்துள்ளார். வாதிக்கு பிராது சொத்தை தவிர வேறு சொத்து இல்லை. மேற்படி துளசிதாஸுக்கும், அவருடைய மனைவி நாகநந்தினிக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டின் காரணமாக 22.05.2025–ம் தேதி முதல் வேறொரு நபருடன் வாழ்ந்து வருகிறார். அதனால் துளசிதாஸ் பிரிந்து வாழும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். மேற்படி துளசிதாஸின் மனைவி நாகநந்தினி மைனர் ஜோதி லிங்கேஷ்வரரையும் உடன் அழைத்துச் சென்று பத்துமாதங்களுக்கு மேல் ஆகி விட்டது. எனவே, குடும்ப சூழ்நிலைகள் மற்றும் தற்போதைய பிரதிவாதியின் பாதுகாவலர் துளசிதாஸின் நிலையைக் கருத்திற்கொண்டு துளசிதாஸின் தாயார் அம்புஜம் மற்றும் அவரது தந்தை தங்கராமன் ஆகியோர் குடும்ப நலனுக்காக பிராது சொத்தின்பேரில் எழுதப்பட்ட தானசெட்டில்மெண்ட்டை ரத்து செய்து வாதி பெயருக்கே மாற்றிக்கொள்வதை பிரதிவாதியின் பாதுகாவலரான துளசிதாஸ் மறுக்கவில்லை. வாதி கோரியுள்ள பரிகாரத்தை வாதிக்கு வழங்குவதற்கு பிரதிவாதிக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

04. பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினா வனைவதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், உபயதரப்பினர்களுக்கிடையே வழக்கை சமரசமாக முடித்துக்கொள்வதென உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 23, விதி 3ன்படி இ.ம.எண்.1/2026 தாக்கல் செய்யப்பட்டு, இடைமனு எண்.1/2026 வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

05. சமரசத்தின் விதிமுறைகள் வாதி மற்றும் பிரதிவாதியால் வாசிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டது. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் எவ்வித நிர்பந்தமும் இல்லாமல் தாமாக முன் வந்து தங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட சமரசத்தின் விதிமுறைகளை ஒப்புக்கொண்டு, இ.ம.எண்.1/2026 சமரச மனுவின்படி, தீர்ப்பாவதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று முன் வைத்துள்ளார்கள்.

06. இருதரப்பும் கேட்கப்பட்டது. உபயவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 23 விதி 3–ன்படி தாக்கல் செய்த ராஜினாமா மனுவான இ.ம.எண்.1/2026 பரிசீலிக்கப்பட்டது. மேற்படி ராஜினாமா மனுவில், வாதி மற்றும் பிரதிவாதிக்கிடையே சமரசம் ஏற்பட்டு அதன்படி உபயவாதிகளும் கீழ்கண்டவாறு தாவா வழக்கை தீர்ப்பு செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

1. இந்த வழக்கின் வாதி, பிரதிவாதியாகிய மைனர் ஜோதி லிங்கேஷ்வருக்கு தந்தைவழி பாட்டியும், மைனரின் பாதுகாவலர் T.துளசிதாஸுக்கு தாயாரும் ஆவார்.
2. வழக்குச் சொத்தானது வாதி அம்புஜம் மற்றும் அவரது கணவர் தங்கராமன் அவர்களின் சுயசம்பாத்தியத்தின் மூலம் வாங்கப்பட்டது என்பதையும், அவர்கள் இருவரால் காலியிடமாக கிரையம் பெறப்பட்டு அவர்கள் மருத்துவத்துறை மூலமாகவும், தனிநபர்கள் மூலமாக கடன் பெற்று வாங்கியது என்பதையும் கிரையம் பெற்ற வாதி அம்புஜத்திற்கு முழு உரிமை உண்டு என்பதை இரு தரப்பினர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

3. வாதி அம்புஜம் தனது மகன் வழிப்பேரன் மைனர். ஜோதிலிங்கேஷ்வரர் மீது கொண்ட அன்பினாலும், பாசத்தினாலும் கடந்த 03.05.2023—ம் தேதி தனது மகன் துளசிதாஸை கார்டியனாக காட்டி பேரன் மைனர் ஜோதிலிங்கேஷ்வரர் பெயரில் ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் வாதிக்கு சொந்தமான வீட்டை தானமாக அய்யம்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.1081/2023—ல் பதிவு செய்து வைத்துள்ளார்.
4. பிரதிவாதி துளசிதாஸுக்கும், அவரது மனைவி நாகநந்தினிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு மேற்படி நாகநந்தினி திருமணத்தின் பொழுது கொண்டு வந்த பொருட்கள் அனைத்தையும் பட்டிவீரன்பட்டி, காவல் நிலையம் மூலமாக பெற்றுக்கொண்டு பிரதிவாதி துளசிதாஸுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று எழுதிக்கொடுத்து விட்டு மைனர் ஜோதிலிங்கேஷ்வரரையும் உடன் அழைத்துக்கொண்டு பிரிந்து சென்று வெறோரு நபருடன் வாழ்ந்து வருகிறார். அதனால் வாதி தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்த வழக்குச் சொத்தினை வாதியின் பெயருக்கே மாற்றுவதுதான் சிறந்தது என்று வாதி மற்றும் பிரதிவாதி ஆகிய இருவரும் கருதுகிறார்கள்.
5. வாதி, மைனர் பெயரில் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை மைனரின் தந்தை என்ற முறையில் ரத்து செய்து மீண்டும் வாதியின் பெயருக்கு மாற்றிக்கொள்ள பிரதிவாதி துளசிதாஸ் மனப்பூர்வமாக சம்மதிக்கிறார்.
6. வாதி, மைனர் பெயரில் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்த பிறகு சொத்தின் முழு உரிமையும், சுவாதீனமும் மீண்டும் வாதி அம்புஜத்திற்கே சென்றடையும் என்ற விபரத்தை பிரதிவாதி துளசிதாஸ் ஏற்றுக்கொள்கிறார்.
7. மைனர் ஜோதிலிங்கேஷ்வரர் அவரது தாயார் நாகநந்தினியின் பராமரிப்பில் வளர்ந்து வருவதாலும், வாதியை பராமரிப்பதும், பாதுகாப்பதும் இனி நடக்கப்போவதில்லை என்ற எணணத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் வாதியின் எண்ணத்திற்கு எதிராகவே அமையும் என்று பிரதிவாதி துளசிதாஸ் நம்புகிறார்.

8. இந்த சமரசமானது எவ்வித வற்புறுத்தலோ அல்லது மிரட்டலோ இன்றி இருதரப்பினரின் முழு மனசம்மதத்தோடும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
9. வாதி மற்றும் பிரதிவாதி இருவரும் முடித்துக்கொள்வதால் வாதி செலுத்திய நீதிமதன்றக் கட்டணத்தை நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 69–ன்படி திரும்ப பெற்றுக்கொள்ள அனுமதியளிக்கப்படுகிறது.
10. ஆகையால், வாதி பிரதிவாதியின் கோரிக்கையை ஏற்று வாதி கடந்த 03.05.2023–ம் தேதி தனது மகன் துளசிதாஸை கார்டியனாக காட்டி பேரன் மைனர். ஜோதிலிங்கேஷ்வரர் பெயரில் அய்யம்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.1081/2023–ல் பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து இந்த ராஜினாமா மனுவை தீர்ப்பாணையின் ஓர் அங்கமாக சேர்த்துக்கொண்டு ராஜினாமா மனு படி தாவா வழக்கை தீர்ப்பு செய்ய உபய வாதிகளும் சம்மதிக்கிறார்கள்.

மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டு, அதனை உபயவாதிகளும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். உபய தரப்பினர்களுக்கிடையே பரஸ்பரம் சமசரம் ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு, வா.சா.ஆ.1 – இ.ம.எண்.1/2026 ராஜினாமா மனுவின் ஷரத்துக்களின் அடிப்படையில் சமரச இறுதி நிலைத் தீர்ப்பாணை வழங்கி உத்திரவிடப்படுகிறது.

**முடிவாக, இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு, கீழ்கண்டவாறு சமரச இறுதிநிலைத் தீர்ப்பாணை பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது.**

1) தாவா சொத்தைப் பொறுத்து, வாதி, மைனர்.ஜோதிலிங்கேஸ்வரர் பெயரில் எழுதிவைக்கப்பட்டுள்ள 03.05.2023–ம் தேதி அய்யம்பாளையம் சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.1081/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) வா.சா.1 – ராஜினாமா மனுவான இ.ம.எண்.1/2026 ஆனது இந்த சமரச இறுதிநிலைத் தீர்ப்பாணையின் ஒரு அங்கமாக பாவித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

3) தரப்பினர்களின் உறவுமுறையைக் கருத்திற்கொண்டு செலவு தொகை எதுவும் இல்லை.

இந்த உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லி, அவரால் கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை திருத்தி, இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SWARNAM J RAJAGOPALAN
Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.23 15:19:30 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**<u>வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:</u>**

இல்லை

**<u>உபயதரப்பினர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணம்:</u>**

வா.சா.ஆ.1 – இடைமனு எண்.1/2026 ராஜினாமா மனு.

SWARNAM J RAJAGOPALAN
Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.23 15:19:36 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.